BEHIND THE WIRE

# இத்திட்டப்பணி குறித்த ஓர் அறிமுகம்

Behind the Wire என்பது கடந்த 23 ஆண்டுகளுக்கும் மேலாக ஆஸ்திரேலியக் கட்டாயத் தடுப்புக்காவலை அனுபவித்துள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் கதைகளை ஆவணப்படுத்துகின்ற ஒரு வாய்மொழியாக வரலாற்றைப் பதிவுசெய்யும் திட்டமாகும். கட்டாயத் தடுப்புக்காவலில் வாழ்ந்துள்ள மக்களின் உண்மை நிலையைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் அது குறித்த பொதுமக்களின் புரிதல்களுக்கு ஒரு புதிய கண்ணோட்டத்தை வழங்குவதற்கு இத்திட்டம் நோக்கம் கொண்டுள்ளது.

தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் முன்னர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் உடனான விரிவான நேர்காணல்களின் வாயிலாக, கதைசொல்லிகளின் (தங்கள் கதைகளை விவரிப்பவர்கள்) வரலாறுகள், ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் நாடும் அவர்களின் அனுபவங்கள் மற்றும் கட்டாயத் தடுப்புக்காவல் குறித்த விரிவான உண்மை நிலை ஆகியவற்றை நாங்கள் பதிவு செய்கிறோம். கதைசொல்லிகளுடன் பணிபுரிந்து, இந்த நேர்காணல்கள் இலக்கிய வழக்கிலான குறுங்கதைகள் வடிவத்தில் நேரடியாகக் கதை கூறுவதைப் போன்று திருத்தப்படுகின்றன.

இந்தக் கதைகளின் வாயிலாக, பாதிப்பில் உள்ள மனித இனங்களின் மீள்திறனை வெளிப்படுத்துவதற்கு, சட்டத்தை மதிக்காதவர்கள் மற்றும் சட்டத்திற்கு கீழ்ப்படிந்து செல்பவர்கள் ஆகியோரின் செயலுக்கு அப்பால், புகலிடம் கோருதல் மற்றும் கட்டாயத் தடுப்புக்காவலில் உள்ள வாழ்க்கை ஆகியவற்றின் உண்மையான மற்றும் துல்லியமான நிலைமையைப் படம்பிடித்துக் காண்பிப்பதற்கு நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கிறோம். அகதிகள் பிரச்சனைகள் குறித்த பொது விவாதங்களில், விவாதத்தின் மையமாக அரிதாகவே எடுத்துரைக்கப்படுகின்ற புகலிடம் கோருபவர்களின் குரல்கள், முகங்கள் மற்றும் கண்ணோட்டங்கள் ஆகியவற்றைச் சேர்ப்பதற்கு நாங்கள் விழைகிறோம்.

Behind the Wire திட்டப்பணி வாயிலாகச் சேகரிக்கப்படும் கதைகள் இணையத்திலும் அச்சிலும் வெளியிடப்படுகின்றன மற்றும் பிற அங்காடிகளால் மறுபிரசுரம் செய்யப்படுகின்றன. பின்வரும் இணையத்தளத்தில் கதைகளை வாசியுங்கள் மற்றும் கூடுதல் விவரங்களை அறிந்துகொள்ளுங்கள்: www.behindthewire.org.au

## பங்கேற்பாளர்களுக்கு:

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாரேனும் ஒருவரோ கட்டாயத் தடுப்புக்காவலை அனுபவித்துள்ளீர்கள் என்றால், மேலும் Behind the Wire திட்டப்பணியில் பங்கேற்க விரும்புகிறீர்கள் என்றால், தயவுசெய்து எங்களை contact@behindthewire.org.au என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளுங்கள்.

பின்வரும் விரிவான அனுபவங்களைக் கொண்ட கதைசொல்லிகளுடன் பணிபுரிவதற்கு நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம்: வெவ்வேறு வயதினர், பாலினங்கள், பிறந்த நாடு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட இடங்கள் (உள்நாடு மற்றும் வெளிநாடு) மற்றும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட காலகட்டங்கள் (அதாவது 1990களில் இருந்து தற்போது வரை தடுப்புக்காவலில் உள்ள காலகட்டம்).

ஒவ்வொரு தனிநபர் கதைசொல்லிகளையும் அவர்களின் கதையையும் கௌரவப்படுத்துவது குறித்து எங்கள் செயல்முறை கவனம் செலுத்துகிறது. எங்களுடைய நேர்காணல்கள் ஒரு உறுதியான மற்றும் வெளிப்படையான அறநெறி சார்ந்த கட்டமைப்பிற்கு ஏற்ப நடத்தப்படுகின்றன என்பதையும், கதைசொல்லிகள் அறிந்தளிக்கப்பட்ட ஒப்புதலுடன் தங்களுடைய கதையைக் கூறுவதற்கான விருப்பத்துடன் பங்கேற்கிறார்கள் என்பதையும் நாங்கள் உறுதிசெய்கிறோம். ஒரு கதைசொல்லி கூறும் அவருடைய கதையுடன் தொடர்பிருக்கக்கூடிய ஏதேனும் சட்ட அல்லது பாதுகாப்புக் கவலைகள் ஏதேனும் நேர்காணல் நடைபெறுவதற்கு முன்னர் விவாதிக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்படுகின்றன.

நேர்காணல்கள் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாக இருக்கும் - யாரேனும் ஒருவரை ஒருமுறை மட்டும் சந்தித்து அவருடனான உரையாடல்களில் இருந்து அவருடைய கதையைப் “பிரித்தெடுப்பதற்குப்” பதிலாக, சாத்தியப்படும் போதெல்லாம் அவருடன் பல பின்தொடர் நேர்காணல்களை மேற்கொள்ள நாங்கள் முயற்சி செய்கிறோம். நேர்காணல் அதிகாரிகளாக, நாங்கள் திறந்த-முனை பதில்களை வரவழைக்கின்ற

திறந்த-முனைக் கேள்விகளைக் கேட்பதற்கும், கதைசொல்லிகள் தாங்கள் ஆதரவளிக்கப்படுவதாக உணர்ந்து, தங்களுடைய கதைகளைப் பயமின்றி பகிர்ந்துகொள்வதற்கான ஒரு நம்பிக்கையை அவர்களிடம் உருவாக்குவதற்கும் வலியுறுத்தப்படுகிறோம். நாங்கள் கதைசொல்லிகளுடன் ஒரு நம்பகமான உறவுமுறையை வளர்த்துக்கொள்வதற்கும், இத்திட்டப்பணி செயல்முறையில் கதைசொல்லிகளின் நண்பர்கள், வழக்குரைஞர்கள் மற்றும் ஆதரவு வலையமைப்பு ஆகியோரை உள்ளடக்குவதற்கும் குறிக்கோள் கொண்டிருக்கிறோம்.

தங்களின் பெயருக்குப் பதிலாக புனைப்பெயர்களைத் தழுவிக்கொள்வதற்கும், தங்களுடைய அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான மற்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கும் மற்றும் தங்கள் கதை எப்போது பிரசுரிக்கப்பட வேண்டும் என்பது குறித்த இறுதி முடிவை எடுப்பதற்கும் கதைசொல்லிர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இந்த நடவடிக்கைகளில் உள்ளடங்குவன:

- கதைசொல்லிகள் எங்களுடன் பேசிக்கொண்டிருந்தாலும் கூட, ஒரு புனைப்பெயரைப் பயன்படுத்துதல்;
- கதைசொல்லிகள் தங்கள் தாய் நாட்டிற்குச் செல்வதற்கான காரணங்கள் குறித்த ஏதேனும் தகவல்களை அல்லது தங்களுடைய அகதி கோரல் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பிற தகவல்களைத் தெரிவிக்காமல் இருப்பதற்குத் தேர்ந்தெடுத்தல்.
- கதைசொல்லியின் கதையில் உள்ள அடையாளம் அறியத்தக்க விவரங்களை நீக்குதல் அல்லது மாற்றுதல்;
- கதைசொல்லி இப்போது எங்களிடம் பேசுதல், ஆனால் தனக்கு நிரந்தரமான குடியிருப்பு அல்லது குடியுரிமை கிடைக்கும் வரை கதையைக் காப்பகப்படுத்தக் கோருதல்;
- பிரசுரிக்கப்படும் கதையில் ஏதேனும் விவரங்களைச் சேர்ப்பது குறித்த இறுதி ஒப்புதல்.

## எங்களைப் பற்றி

Behind the Wire திட்டப்பணியானது, André Dao, Sienna Merope, Michael Green, Angelica Neville மற்றும் Dana Affleck ஆகியோரால், Right Now மற்றும் Voice of Witness ஆகிய அமைப்புகளிடமிருந்து அமைப்புரீதியான ஆதரவுடன்

ஒருங்கிணைக்கப்படுகிறது. contact@behindthewire.org.au என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்ளுங்கள்

Behind the Wire திட்டப்பணியானது தனது ஹியூமன் ரைட்ஸ் இன்னொவேஷன் ஃபண்ட் வாயிலாக Amnesty International Australia என்ற அமைப்பிடமிருந்து ஆதரவைப் பெற்றுள்ளது.

André Dao அவர்கள் புனைவு மற்றும் அபுனைவு எழுத்தாளர் மற்றும் Right Now அமைப்பின் பொதுப் பதிப்பாசிரியர் ஆவார்.

Sienna Merope அவர்கள் மனித உரிமைகளுக்கான வழக்குரைஞர், வழக்கறிஞர் மற்றும் எழுத்தாளர். இவர் தற்சமயம் ஹைத்தியில் உள்ள Institute for Justice and Democracy உடனான Bertha Foundation -இல் உறுப்பினரான உள்ளார். இவர் பாஸ்டன் மற்றும் போர்ட்-ஆவ்-பிரின்ஸ் ஆகியவற்றுக்கு இடையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டவர்.

Michael Green அவர்கள் மெல்பர்னில் ஒரு சார்பிலா பத்திரிக்கையாளராக உள்ளார்.

Angelica Neville அவர்கள் Vasudhara Foundation -இல் ஒரு இணையாளியாகவும், ஒரு சார்பிலா எழுத்தாளராகவும் உள்ளார். இவர் தனது முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்காக, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பலவந்தப்படுத்திய குடியேற்றக் கொள்கையில் நிபுணத்துவம் பெற்றவர்.

Dana Affleck அவர்கள் Road to Refuge -இன் அடிப்படை இயக்குநர். இவர் சட்டம் படிக்கிறார். மேலும், இவர் Asylum Seeker Resource Centre -இன் இளையர் ஏற்பாட்டாளர்.